திரு. த. மாரிமுத்து: விராலிமலைப் பகுதி மக்களுக்கு விவசாயம் தவிர வேறு தொழில்கள் கிடையாது. பருவமழை தவறிப் போனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் அரசு சார்பில் தொழில் நிறுவனங்கள் அமைத்து மாற்றுத்தொழில் அந்த மக்களுக்கு ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அந்தப் பகுதி பின்தங்கிய பகுதி என்ற காரணத்தால்தான் சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் அந்தத் தொழிற்சாலை துவங்க பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சேலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் நூற்பாலைகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 942—திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலத்தில் நூற்பாலை ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை.

*வினா எண். 943—திரு. சு. அங்குசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டைக்கு அருகில் உள்ள வேலாயுத பட்டினத்தில் கூட்டுறவு நூற்பாலை கட்டும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம்: சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதியில் எந்தவிதமான தொழில் வசதியும் இல்லை. ஆகவே நூற்பாலை அமைக்கும் திட்டத்தில் சேந்தமங்கலத்தில் ஒரு நூற்பாலை நிறுவ இனிமேலாவது அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒன்றும் தர்மபுரி மாவட்டத்தில் ஒன்றும் அதேபோல் மதுரை (தேனி) மாவட்டத்தில் ஒன்றும் இப்படி மூன்று மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையில்

நூற்பாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன. இவைதான் நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன.

திரு. செ. சிவசாமி : கிழக்கு இராமநாதபுரம் மிகவும் வறண்ட பிரதேச மாகும். அங்கே ஒரு நூற்பாலை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக வைக்கப்பட்டிருந்தும்கூட, கிழக்கு இராமநாதபுரத்தில் உள்ள வறட்சி நிலையையும் கருத்தில் கொண்டு, நூற்பாலை துவங்குவதில் அதற்கு முதன்மை ஸ்தானம் கொடுத்து இந்த ஆண்டே அங்கு ஒரு நூற்பாலை அமைக்க வேண்டிய ஏற்பாடு செய்து கொடுத்தால் நிச்சயமாக அங்குள்ள கலவரங்களையெல்லாம் போக்குவதற்கும், அங்கே தொழில் கிடைப்பதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்வதன் மூலம் அங்கே நல்ல தொரு நிலை ஏற்படச் செய்ய முடியும். ஆகவே அந்த அடிப்படையில் நூற்பாலை ஒன்றை அந்தப் பகுதியில் அமைக்கும் திட்டம் உண்டா ?

(பதில் இல்லை).

திரு. ப. தீர்த்தராமன் : தர்மபுரி மாவட்டத்தில் ஒரு நூற்பாலை அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி, அந்த நூற்பாலையை பெண்ணாகரத்தில் ஆரம்பிக்க முன்வருவார்களா?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 944, 945, 946 ஆகியவை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு] ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

பாரதப் பிரதமர் பயணம் செய்ய இருந்த விமானத்திற்கு நேரயிருந்த விபத்து தவிர்க்கப் பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்மிக்க சர்வதேசத் தலைவர்களில் ஒருவரும், மாதர்குல மணி விளக்காய் விளங்கும் இந்தியப் பேரரசினுடைய தலைமை அமைச்சருமாகிய மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அண்மையில் பயணம் செய்ய இருக்கும்போது விமானத்தில் நாசவேலை காரணமாக பழுதாக்கப்பட்ட